### இடம்பெற்றுத்தழால்.

வந்தாளுமையர் திருவெங்கைவாணர்வரையிணங்கே
நந்தாமணிவிளக்குற்றுதிர்பூவணேநன்கமைந்த
பைந்தாதுகுக்குங்கணிபேறுமல்லிகைப்பந்தரிடஞ்
சிந்தாகுலமறநாமிசையோர்மணஞ்செய்வதற்கே. (௧௩)

### வழிபாடுமறுத்தல்.

அகலாதடைக்கலம்புக்கபுட்காகத்தன்னுகமெல்லா
மிகலாயரிந்துபுரந்தவற்காத்தவர்வெங்கையிலே
யிகலாதயற்சந்தனம்படர்ந்தேறுமிளங்கொடியே
புகலாயெனக்குயிர்போலுநன்றுணைப்புரந்தருளே. (௧௪)

### இடையூறுகிளத்தல்.

மதயானையீருரியூடேமறைந்துமழைமறைத்த
வுதயாதிபனெனநின்றூர்தம்வெங்கையிலுன்றனைப்போற்
கதையாலெனினுமறிந்திலம்வேள்கலகத்தணங்கே
புதையாதுபைம்பொற்குடங்கிர்வாளைப்புதைப்பதுவே (௧௫)

### நீடுநினைந்திரங்கல்.

சூலக்கரத்தர் திருவெங்கைவாணர்முன்சுட்டமத
னீலக்கணையிற்கைவைத்தானினிச்சற்றுநேரகிற்பிற்
காலற்கினையிடுமென்னுவியையிந்தக்காரிகையார்
கோலக்களபக்குன்றென்றேமருங்குருகுவதே. (௧௬)

### மறுத்தெதிர்கோடல்.

சந்தாபவெந்தழறன்னடியார்க்குத்தணித்தருளுஞ்
செந்தாமரைமலர்த்தாளர்தம்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னந்தாமதுகையொடுபிறப்பேழுநமைத்தொடர்ந்து
வந்தார்தமையிந்நிறையோவராமன்மறிப்பதுவே. (௧௭)

---

(௧௩) இசையோர்மணம் - காந்தருவவிவாகம்.

(௧௪) புரந்தவன் - சிபிச்சக்கரவர்த்தி. (௧௭) சம் - பிறப்பு.

### தலைவிதறிமருண்டமைபாங்கிதலைவற்குரைத்தல்.

ஈயாதவரைக்கண்டவரெனச்செல்லிரவலாபோற்
போயாவியிற்சிறுமாங்கனிவீழப்புரவலனே
நீயாவியிற்செய்குறியெனவேசென்றுநிதர்வெங்கை
வீயாமலர்க்குழலாள்வறிதேநொந்துமீண்டனளே. (உ0உ)

### அவன்மொழிக்கொடுமைபாங்கியவட்கியம்பல்.

கள்ளெழுங்கொன்றையர்வெங்கையிலேமைக்கடலின்மதி
நள்ளெழுங்காலம்பெறவேகுறியிடநான்மருவி
யுள்ளெழுங்காமமருந்துபெறுமலுழன்றுசென்றேன
புள்ளெழுங்காலையென்றாரன்பர்தாமிளம்பூங்கொடியே. (உ0ங)

### என்பிழைப்பன்றென்றிறைவிநேர்தல்.

அஞ்சாமதற்றெறும்வெங்கைபுரேசரணிமிடற்றி
னஞ்சாமிருளிற்குறிபிழையாதொருநான்குறித்துத்
துஞ்சாதிருந்துந்துஞ்சுற்றாளெனவவர்தூற்றப்பட்டே
னெஞ்சாவமுதனையாயினிநானிதற்கென்செய்வதே. (உ0ச)

### தாய்துஞ்சாமை.

கயிற்றாணிகழரவம்போற்சகந்தனிற்கற்பனையாக்
குயிற்றாநிகழிறைவெங்கையிலேயெழுங்கூன்பிறையோ
ரெயிற்றாணிகழுமிளம்பேதையாமிவ்விரவுவந்து
துயிற்றாவனைதனைவெங்காலதூதர்துயிற்றுகவே. (உ0ரு)

### நாய்துஞ்சாமை.

சுனைவாய்மடைதிறக்கும்பலவான்வயற்றோன்றுசெங்நெல்
விளைவாய்மலியுந்திருவெங்கைவாணர்தம்வெற்பிடைமா
தனைவாய்மடமயிலேதனிவேழந்தனையொருபுன்
வளைவான்ஞமலிகுரைத்திங்குறுமன்மறித்ததுவே. (உ0சு)

